**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 08 ம் நாள்**
**I.A.No. 01/2025**
**in**
**O.S.No.1242/2022**

சரவணசாமி ... மனுதாரர்/பிரதிவாதி

/ எதிராக /

1. முத்தம்மாள் (இறப்பு)
2. நாச்சிமுத்து ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது கடந்த 21.08.2025 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, அன்றைய தினமே கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என்முன்பாக கடந்த 16.09.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.L.அருண்பிரகாஷ் அவர்கள் முன்னிலையாகியும், 2 ம் எதிர்மனுதாரர்/ 2 ம்பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.மாரப்பன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாண பத்திரிக்கை, எதிர்மனுஉரை, வழக்குகோப்பு பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வழக்குரைஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் :

**<u>உத்தரவு</u>**

1. இம்மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்களை ஏற்பதற்காக உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 1A(3)ன் கீழாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனு மற்றும் பிரமாணபத்திரிக்கையின் சுருக்கம் :**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது, சில ஆவணங்கள் மனுதாரர்/பிரதிவாதி வசம் இல்லாத காரணத்தால், தாக்கல் செய்ய இயலாமல்

போய்விட்டது. இவ்வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய சில முக்கிய ஆவணங்கள் தற்போது தான் கிடைத்துள்ளது. உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்திருப்பதை மன்னித்து ஏற்றுக்கொள்ள அனுமதி வேண்டி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :**

மனுவின் 2ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிர்உரையை தாக்கல் செய்யும்போது மனுவில் கண்ட ஆவணங்களை தாக்கல் செய்யாமல் போனதற்கான காரணங்கள் எதையும் அவரது மனுவில் குறிப்பிடவில்லை. சில கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய போவதாக இம்மனுவில் குறிப்பிட்டிருப்பது சரியானதல்ல. எதிர்உரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்குரிய ஆவணங்களை வழக்குக்கு முந்தைய ஆவணங்களை மட்டும்தான் சட்டப்படி தாக்கல் செய்ய முடியும். மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒன்பது ஆவணங்களுக்கும், மனுதாரர்/பிரதிவாதிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 8 முதல் 10 ஆவணங்கள் எதிர்மனுதாரர்/வாதியின் தாயரான 1ம் வாதி அசல் வழக்கை தாக்கல் செய்த பிறகு மனுதாரர்/பிரதிவாதியால் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டதாகும். அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு ஏற்படும் ஆவணங்களை பற்றி சாட்சியம் அளிக்கவோ, அந்த ஆவணத்தை குறியீடு செய்யவோ அனுமதி கோர முடியாது. மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்/பிரதிவாதி கோரியுள்ள பரிகாரம் மனுதாருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் அதிகப்படியான செலவுதொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவை அனுமதிக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதே பிரச்சனையாகும்.**

**5. பிரச்சனைக்கான தீர்வு :**

**5.1.** அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது, சில ஆவணங்கள் மனுதாரர்/பிரதிவாதி வசம் இல்லாத காரணத்தால், தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவுடன் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்கவேண்டும் என பிரதிவாதி தரப்பில் மனுவானது முன்னெடுத்துச்செல்லப்பட்டுள்ளது. 2ம் மனுதாரர்/2ம் வாதி தாக்கல் செய்யும் ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு மனுதாரால் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்ய ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கு தாக்கல் செய்த பின்பு ஏற்படுத்தப்பட்டது என்பதால், அதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என 2ம் எதிர்மனுதாரர் /2ம் வாதி தரப்பில் மனுவானது முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

**5.2.** இம்மனுவின் அனைத்து சூழ்நிலைகளையும் ஒருங்கியல்பாக பரிசீலனை செய்யும்போது, அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம், அதன் தொடர் பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் கடந்த 26.11.2021ம் தேதி 2ம் பிரதிவாதியால் ஒட்டன்சத்திரம் சார்பதிவகத்தில் 3019/2021ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் 2ம் லக்க சொத்தை பொறுத்து சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரி வாதிகளால், பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பு சாட்சிகளை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாணை செய்யப்பட்டும், வாதி தரப்பு சாட்சி சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், பிரதிவாதி தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி இம்மனுவானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

**5.3.** அசல் வழக்கின் தன்மையானது பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களாகும். மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது, 20.07.2011, 24.08.2015 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணங்கள், 12.06.2019, 26.11.2021 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட கிரைய பத்திரங்கள், தாவா சொத்துக்களுக்கான கணினிபட்டா, 16.03.2022, 09.04.2022 ஆகிய தேதிகளில் புலியூர் நத்தம் குறுவட்ட அளவர் அனுப்பிய அறிவிப்பு மற்றும் கவர், 25.04.2022 ம் தேதிய பிழை திருத்தல் ஆவணம், 07.06.2023 ம் தேதிய WP(MD)No.7040/2017 ன் உயர்நீதிமன்ற உத்தரவு, 22.08.2024 ம் தேதிய அம்பிளிக்கை காவல்நிலைய மனு எண்.150/2024 ன் மனு ரசீது ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ள 9 வது ஆவணத்திற்கும், மனுதாரர்/பிரதிவாதிக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை எனவும், 8 முதல் 10 ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்த பிறகு ஏற்பட்ட ஆவணங்கள் எனவும் 2 ம்எதிர்மனுதாரர்/2 ம்வாதி தரப்பில் கூறியுள்ள நிலையில், அந்த ஆவணத்தின் தன்மை பொறுத்து அசல் வழக்கின் இறுதி விசாரணையின்போது தான் தீர்மானிக்க இயலும் இந்த மனுவில் அறிய இயலாது. மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கிற்கு அவசியமான ஆவணமாகும். மனுதாரர்/பிரதிவாதி மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எதிர்வழக்குரை தாக்கல் செய்த சமயத்தில் தாக்கல் செய்யாமல் போனதற்கான காரணங்கள் எதனையும் மனுவில் குறிப்பிடவில்லை என 2 ம்எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கூறியிருந்தபோதிலும், அசல் வழக்கானது விளம்புகை பரிகாரங்களுக்காக தாக்கல் செய்துள்ள நிலையில், வழக்கு தரப்பினர்கள் தங்களுடைய நிலைப்பாட்டை உரிய சாட்சிய சான்றாவணங்களின் வழியாக நிரூபணம் செய்ய போதிய வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகும். இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சிகள் முன்னிலைப்படுத்துவதற்காக வழக்கு விசாரணைக்காக உள்ள நிலையில், மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்பதால் 2 ம்எதிர்மனுதாரர்/2 ம் வாதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. எனவே, அசல் வழக்கில் பிரதிவாதியின் நிலைப்பாட்டை நிரூபணம் செய்ய, பிரதிவாதி இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்கும்பொருட்டு இம்மனுவை

அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மனுவின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுதொகை பற்றிய உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

**6. முடிவில்,**

**இம்மனு செலவுதொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

**Sd/–C.ஜெயபிரகாஷ்,**
**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

| | | |
|---|---|---|
| **மனுதாரர் /பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** | : | இல்லை. |
| **மனுதாரர்/ பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** | : | இல்லை. |
| **எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பு சாட்சிகள்** | : | இல்லை. |
| **எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** | : | இல்லை |

**Sd/–C.ஜெயபிரகாஷ்,**
**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 08 ம் நாள்**
**I.A.No. 01/2025**
**in**
**O.S.No.1242/2022**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வெரியப்பூர் போஸ்ட், நாகப்பன்பட்டி என்ற முகவரியில் வசிக்கும், செல்லப்பகவுண்டர் அவர்கள் மகன் இந்து சுமார் 47 வயதுள்ள சரவணசாமி. ... மனுதாரர்/பிரதிவாதி

/ எதிராக /

1. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வெரியப்பூர் போஸ்ட், நாகப்பன்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் லேட்.சண்முகவேல் கவுடர் மனைவி இந்து வயது சுமார் 74 உள்ள முத்தம்மாள் (இறப்பு)
2. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வெரியப்பூர் போஸ்ட், நாகப்பன்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் லேட்.சண்முகவேல் அவர்கள் மகன் இந்து வயது சுமார் 53 உள்ள நாச்சிமுத்து ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்களை ஏற்பதற்காக உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 1A(3)ன் கீழாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கலான நாள் : 21.08.2025**

**மனுவின் மீதான வில்லை : ரூ.20/–**

இம்மனுவானது கடந்த 21.08.2025 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, அன்றைய தினமே கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என்முன்பாக கடந்த 16.09.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.L.அருண்பிரகாஷ் அவர்கள் முன்னிலையாகியும், 2 ம் எதிர்மனுதாரர்/ 2 ம்பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.மாரப்பன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாண

பத்திரிக்கை, எதிர்மனுஉரை, வழக்குகோப்பு பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வழக்குரைஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் உத்தரவாணையை வழங்குகின்றது.

**உத்தரவாணை**

1. **இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **செலவுதொகை இல்லை.**

செலவுபட்டியல்

| | மனுதாரார் ரூ. | எதிர்மனுதாரார் ரூ. |
|---|---|---|
| மனுவின் மீதான ஸ்டாம்ப் | ரூ.20.00 | |
| வக்காலத்திற்கான ஸ்டாம்ப் | -- | |
| | செலவுபட்டியல் தாக்கல் இல்லை | |
| மொத்தம் | 20.00 | |

**சொத்து விவரம்– இல்லை**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 07–ஆம் நாள் என்கையெழுத்தும், இந்நீதிமன்ற இலட்சினையும் இடப்பட்டது.

**sd/–C.ஜெயப்பிரகாஷ்,**
**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**